Freedom Fighters' Pension

*2 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the daughter of Late P. Jeevanandam has applied for Freedom Fighters' Pension; and

(b) if so, the action taken by the Government?

தியாகி பென்ஷன்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அமரர் ப. ஜீவானந்தத்தின் மகள், தியாகி மான்ய உதவி கேட்டு விண்ணப்பித்திருக்கிறாரா?

(இ) ஆமெனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மத்திய அரசு அறிவித்துள்ள தியாகி மானிய விதிகளின்படி அவர்கள் இந்த பென்ஷன் பெறுவதற்குத் தகுதி பெறவில்லை. எனவே தியாகி மானியம் வழங்க இயலாது என மத்திய அரசு செல்வி உமாதேவிக்கு அனுப்பிய பதிலின் பிரதி ஒன்று மாநில அரசுக்கு 10—11—1973-ல் கிடைத்துள்ளது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, மத்திய அரசு நிராகரித்த பல காரியங்களை மாநில அரசு செய்ய முன்வந்து, இது போன்ற தியாகிகள் வீட்டாருக்கு உதவி செய்திருக்கிறது. அந்த அனுதாப எண்ணத்தோடு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பரிசீலனை செய்து, ஜீவா குடும்பத்திற்கு உதவி செய்ய அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, திரு. ஜீவா அவர்களுடைய துணைவியார் இப்போது 'உமன்ஸ் வெல்ஃபேர்' டிபார்ட்மெண்டில் பணிபுரிந்து வருகிறார்கள். இப்போது வரையறுக்கப்பட்ட தகுதிகளின்படி 5 ஆயிரத்திற்கு மேல் வருமானம் உடையவர்களுக்கு இந்த மானியங்கள் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, ரூ. 5 ஆயிரத்திற்கு மேல் வருமானம் கிடைக்கக்கூடிய குடும்பத்திற்குத் தர இயலாது என்ற அடிப்படையில் தான் மத்திய அரசு நிராகரித்திருக்கிறது. அவர்கள் நிராகரித்ததற்குச் சொல்லப்படுகிற காரணங்கள் மாநில அரசுக்கும் பொருந்தும்.